


# மஸ்ஜிட் இந்தியாவில் மற்றொரு

# நில அமிழ்வு...!

**இரா. கோபி**

கோலாலம்பூர், ஆக. 29-

கோலாலம்பூர் ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் ஏற்பட்ட நில அமிழ்வில் விழுந்து புதையுண்ட ஆந்திராவைச் சேர்ந்த விஜயலட்சுமியை 7ஆவது நாளாக தேடும் பணி இன்றும் தொடர்கிறது.

பக்கம் 13

## மஸ்ஜிட் இந்தியாவில்...

நேற்று முன்தினம் தேடல் முயற்சியில் ஈடுபட்டிருந்த கோலாலம்பூர் மாநகர மன்ற ஊழியர்களை ஏற்றி வந்த வேன் ஒன்று விஜயலட்சுமி புதையுண்ட இடத்திலிருந்து 50 மீட்டர் தூரத்தில் அமிழ்வு கண்டது என்று டாங் வாங்கி போலீஸ் தலைவர் ஏசிபி ஷுலிஸ்மி அபெண்டி தெரிவித்தார்.

இச்சம்பவம் அதிகாலை 3.40 மணியளவில் நிகழ்ந்தது என்று அவர் தெரிவித்தார். இந்த நில அமிழ்வு ஏற்பட்ட இடத்தை தேசிய போலீஸ் படைத் தலைவர் டான் ஸ்ரீ ரசாருடின் உசேன் காலை 11.30 மணியளவில் பார்வையிட்டார்.

சம்பவம் நடந்த இடத்திற்கும் மஸ்ஜிட் இந்தியாவில் அமைந்துள்ள போலீஸ் சாவடிக்கும் கிட்டத்தட்ட 5 மீட்டர் உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சம்பவம் நடந்த இடத்தில் கோலாலம்பூர் மாநகர் மன்ற அதிகாரிகள் உடனே தீர்வு காண்பதற்கு உடனே செயல்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மஸ்ஜிட் இந்தியா பகுதியில் கிட்டத்தட்ட 10 வியாபாரக் கடைகள் மூடப்பட்டுள்ளன. அப்பகுதியில் தீயணைப்பு வீரர்களும் மாநகர் மன்ற ஊழியர்களும் மூடும் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விவகாரத்திற்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று ஏசிபி ஷுலிஸ்மி அபெண்டி தெரிவித்தார்.